**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 32/2022</u>**
**<u>வழக்கு சாட்சி PW-8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr. பழனிக்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மாடசாமி | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எலும்பு மூட்டு பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.05.2020 அன்று நான் பணியில் இருக்கும் போது, மாரியப்பன் என்ற 52 வயதுடைய ஆண் நபரை அவசர சிகிச்சைப்பிரிவில் அழைத்து வரப்பட்டார். அவருக்கு டாக்டர்.பிரவின் என்பவர் எக்ஸ்-ரே அறிக்கை வழங்கியுள்ளார். எக்ஸ்-ரே அறிக்கையின் படி அவருக்கு கீழ்க்கண்ட எலும்பு முறிவுகள் இருந்துள்ளது.

(1). வலது முழங்கையில் எலும்பு முறிவு இருந்துள்ளது.

அவருக்கு மாவுக்கட்டு போடப்பட்டு சிகிச்சை வழங்கி 27.05.2020 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு வழங்கப்பட்ட

சிகிச்சை விபரச்சான்று அ.சா.ஆ.6 ஆகும். நுண்கதிர் பட அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.

பின்னர் அன்றைய தினம், பொன்னுத்தாய் என்ற 45 வயதுடைய பெண் நபர் அவசர சிகிச்சைப்பிரிவில் அழைத்து வரப்பட்டார். அவருக்கு டாக்டர்.பிரவின் என்பவர் எக்ஸ்–ரே அறிக்கை வழங்கியுள்ளார். எக்ஸ்–ரே அறிக்கையின் படி அவருக்கு கீழ்க்கண்ட எலும்பு முறிவுகள் இருந்துள்ளது.

(1). வலது முழங்கையில் எலும்பு முறிவு இருந்துள்ளது.

அவருக்கு மாவுக்கட்டு போடப்பட்டு சிகிச்சை வழங்கி 27.05.2020 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை விபரச்சான்று அ.சா.ஆ.8 ஆகும். நுண்கதிர் பட அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும்.

(சாட்சி திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து சிகிச்சை குறிப்புகளை பார்த்து சாட்சியம் அளித்தார். அந்த சிகிச்சை குறிப்புகளில் இருந்த நுண்கதிர் படம் ஸ்கேன் செய்து இந்நீதிமன்ற இ–மெயிலில் அனுப்புவதற்கு சொல்லப்பட்டது. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் நகலை சாட்சி சான்றாவணமாக குறயீடு செய்ய வேண்டுகோள் விடுத்தார். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தார். மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் வழக்கை தீர்மானிப்பதற்கு அவசியம் என்பதினால் சாட்சி சான்றாவணமாக ஆக குறியீடு செய்ய அனுமதிக்கப்பட்டது).

மாரியப்பன் என்பவரின் நுண்கதிர் பட நகல் – சா.சா.ஆ.1 ஆகும்.

பொன்னுத்தாய் என்பவரின் நுண்கதிர் பட நகல் – சா.சா.ஆ.2 ஆகும்.

இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மாரியப்பன், பொன்னுத்தாய் ஆகியோர்கள் சங்கரன்கோவில் மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். காயம்பட்ட நபர்களுக்கு நான் பார்த்த காயங்கள் இருசக்கரவாகனத்தில் சென்று கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Sivamurugan, Junior Assistant திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.16 11:05:11 +0530